12 காலணா Regd. No. M. 2811.


சுதந்திரச்சங்கு

“ சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே ”

வாரம் மும்முறை வெளிவரும் Acc-No-1084 ஆசிரியர் :
வருட சந்தா 4½ ரூபா சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 23-2-33

நொண்டியின் சமாதானம்



கிழக்கே சீனாவும் ஜபபானும் யுத்தத்திற்கு அணி வகுத்து நிற்கின்றன. ‘ இந்தச் சண்டையை முளையிலேயே கிள்ளி விடுவேன்.’ என ஸர்வ தேச சங்கம் என்ற சபை ஓர் காலத்தில் வீம்பு கூறிற்று. பஞ்சாயத்தாரையும், பத்தொன்பது பேர் கமிட்டியையும் நியமித்தும் பாச்சா பலிக்க வில்லை. சண்டை என்னமோ நடக்கவே போகிறது ஆயினும் “விட்டேனா பார்! சண்டை போட்டால் குறுக்கே புகுந்து தடுத்து விடமாட்டேனா ” என்று 8000 மைல்களுக்கப் பாலிருந்து ஷ சங்கம் சொல்லிக் கொண்டேயிருக்கிறது. காலும் கையுமற்ற இந்த நொண்டிச் சங்கமாவது, யுத்தத்தைத் தடுக்கவாவது !

உலகம் போற்றும் உத்தமன்

உலகில் மீண்டும் அஹிம்சா தர்மத்தைப் பரப்புவதற்காகத் தோன்றியுள்ள மகானாக காந்தியடிகளை அநேகர் பன்முறை போற்றியிருக்கின்றனர். அத்தகைய புகழ் மாலையொன்றை காந்தியடிகளுக்கு குட்டத் தலைப்பட்ட மேனாட்டினர் ஒருவர் முன்னுக்குப் பின் முரணாக எதையெதையோ உளறியிருக்கின்றார். ஸர்வ தேச சங்கத்தின் சமாதான தூதரான லிட்டன் பிரபு என்பார் சமீபத்தில் 'சாந்தக் கலாசாலை'யில் பேசியதாவது:—

"சமாதானத்தை நிலை நாட்ட உண்மையோடும், பிடிவாதத்தோடும் உழைப்பவர் காந்தியென்பவர். ஆனால் அவரைப் பின் பற்றுபவர் யுத்தப் பிரியர்களாயிருக்கின்றனர். சமூகச் சீர்திருத்த விஷயத்தை மட்டும் காந்திஜி எடுத்துக் கொண்டிருப்பாராயின் இந்தத் தலைமுறையில் இந்தியர்களுள் அவரே பெரியவரென்று சொல்லலாம். ராஜீயத்தில் அவர் ஆழந் தெரியாதிருக்கிறார். காந்திஜியின் மேன்மையான குணாதிசயங்களை அவரது நாட்டினர் போற்றுவது வாஸ்தவமே. ஆனால் அவரது கொள்கைகளைப் பின் பற்றுபவர் சளைத்து விட்டனர். சட்ட மறுப்பு இயக்கத்தின் பயனாக இந்தியாவில் பலாத்காரமே மிகுந்து விட்டது."

மத்தளத்துக்கு இரு புறத்திலும் இடி என்ற கதையாக இது இருக்கிறது. இந்தியாவிலுள்ள சில யதாபூர்விகள், "காந்தி ராஜீயத்திலிருக்க வேண்டுமேயன்றி சமூக விஷயங்களில் நுழையலாகாது" என்கின்றனர். ஆனால் பிரிட்டிஷ் ராஜீய வாதியாகிய லிட்டனோ, "காந்திஜி சமூக விஷயத்தில் தான் பாடுபட வேண்டும்" என்கிறார். இவ்விரண்டில் எது சரியான அபிப்பிராயம்? இருவரும் தவறு என்பதே நமது அபிப்பிராயம். காந்தீயத்தில் ராஜீயம், மதம், சமூகம் யாவும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு கிடக்கின்றன என்பதை இவர்களறியவில்லை.

சட்ட மறுப்பு இயக்கம் பலாத்காரத்தில் கொண்டு போய் விட்டு விட்டதாக லிட்டன் கருதுகிறார். யார் பலாத்காரத்தில் இறங்குகின்றனர்? சத்தியாக்கிரகத் தொண்டர்களா? சர்க்கார் சேவகர்களா? சட்ட மறுப்பை அடக்குவதற்காக சர்க்கார் தரப்பினர் கையாண்டு வரும் பலாத்கார முறைகளை லிட்டன் பிரபு குறிப்பிடுவது வாஸ்தவமானால் அவர் வாய்க்கு சர்க்கரை போடவேண்டும். அப்படிக்கின்றி சத்தியாக்கிரகத் தொண்டர்களைப் பலாத்காரக்காரர்கள் என்று சொல்வராயின் அவர் அதை நிரூபித்தே தீர வேண்டுமன்றோ? நிற்க,

"சமாதானத்தை நிலை நாட்டுவதற்குப் பாடுபடுபவர்" என்று காந்திஜியை பிரிட்டிஷ் சிகரமாகிய லிட்டன் பிரபு வருணித்திருக்கிறார். ஆனால் அந்த வர்ணனை இந்தியாவில் இப்போது தனியரசு செலுத்தும் வில்லிங்டன் என்பார் காதில் விழுந்ததா என்று கேட்கிறோம். இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே சமாதானத்தை நிறுவ வந்துள்ள புண்ணிய மூர்த்தியின் பெருமையை இனியாவது வில்லிங்டன் உணர்வாராக!

ரஸ்கினும், காந்திஜியும்

மகாத்மாஜி, தமது சுய சரித்திரத்தில் (சத்திய சோதனை) மூன்று பெரியார்களைத் தமது குருவாகக் கொண்டிருப்பதை விளக்கியுள்ளார். "எனது பாரமார்த்திக குரு டால்ஸ்டாய்; (ருஷிய ஞானி) அஹிம்ஸா தர்ம குரு ஜான் ரஸ்கின்; (ஆங்கிலேய ஞானி) ராஜீய குரு கோகலே" என அவர் சொல்லியிருக்கிறார்.

ரஸ்கினின் 114வது பிறந்த தின விழா அன்று பர்மிங்ஹாமில் கொண்டாடப் பட்டபோது, டாக்டர் பார்னெஸ் என்பார் ரஸ்கினால் மகாத்மாவின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தமேற்பட்ட விதத்தை எடுத்துரைத்தார். "சுமார் 30 வருஷங்களுக்கு முன்னர் தென்னாப்பிரிக்காவில் ஒரு இந்திய வாலிபர் பாரிஸ்டர் தொழில் நடத்தி வந்தார். அந்தத் தொழிலில் அவருக்கு நல்ல வரும்படி கிடைத்து வந்தது. ஒரு சமயத்தில் அவர் வெகு தூரம் ரயில் வண்டியில் பிரயாணம் செய்ய நேரிட்டது. அப்பொழுது "கடைசி வரை" (Unto this Last) என்ற ஒரு புததகத்தை ஒரு நண்பர் அவருக்குக் கொடுத்தார். பதினைந்து நாட்கள் கழிந்து சந்தித்தபோது "நீங்கள் கொடுத்த புத்தகம் எனக்குப் பெரிய சுரங்கம் போன்றது. அது எனது வாழ்வையே மாற்றி விட்டது." என்று பாரிஸ்டர் சொன்னார். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் தமது பாரிஸ்டர் தொழிலை விட்டொழித்து, ரஸ்கினின் சிஷ்யரானார். அந்த மகா புருஷரைத் தான் இன்று உலக மக்கள் மகாத்மா காந்தி என அழைக்கிறார்கள்." என்றார் பார்னெஸ்.

யுத்தம்! யுத்தம்!

'ஜிஹோல்' என்ற பிரதேசம் சீன நாட்டிலுள்ளது. அதைப் பிடிங்கிக் கொள்வதென்று ஜப்பான் தீர்மானித்திருக்கிறது. அந்தப் பிரதேசத்தை விட மாட்டோமென வட சீனாவின் சேனாதிபதியான மார்ஷல் சாஸ்-லீ-லியாங் தோள் தட்டி ஆர்ப்பரித்து விட்டான். சீனாவின் இளைஞர்கள் பலர் தங்கள் நாட்டைக் காப்பதற்காக கலாசாலைகளையும் புறக்கணித்துவிட்டு அணி வகுத்து நிற்கின்றனராம். ஜப்பானியப் படைகளும் ஆயிரக் கணக்கில் வந்து நிற்கின்றனவாம். இனி மேல் நெருப்பைக் கக்க யாராவது ஆரம்பம் செய்ய வேண்டியதுதான் பாக்கி. உடனே யுத்தம்! யுத்தம்! மனிதனை மனிதன் கொல்லும் அநியாயமான காட்சிகள் அங்கு தென்படும்! அட அநியாயமே!

ஆசியா கண்டத்தில் ஒரு நாடு முன்னேற்றமடைந்திருப்பதைக் கண்டு நாமனைவரும் சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த நாடான ஜப்பான் இன்று மண்ணாசை கொண்டு அண்டை அயல் நாடுகளைத் தாக்குவதைக் காணும் போது அதன் ஆசையில் மண் விழலாகாதா வென்று அறிஞர்கள் வேண்டுகின்றனர். அபினி மயக்கத்திலிருந்து சீன தேசம் ஸமீபத்தில் தான் விழித் தெழுந்தது. சீன தேசத்து இளைஞர்களும், சிறுமிகளும் தேசபக்தி மிகுந்தவர்களா யிருக்கின்றனர்.

ஒரு வருடத்துக்கு முன்னே 'ஷாங்காய்' என்ற நகரமானது ரண களமாக மாறி எவ்வளவு உயிர்ச் சேதமும் பொருட் சேதமு மேற்பட்டதோ, அவ்வாறே இப்போது ஜிஹோல் பிரதேசத்தில் கொடூரங்கள் நடக்கலாம்! இந்த அநியாய யுத்தத்தைத் தடுப்பதற்கு உலகில் யாருமில்லையா? 'சர்வ தேச சங்கம்' என்ற ஸ்தாபனம் வெறும் 'சொத்தைச் சபை' யென்பது வெட்ட வெளிச்ச[illegible]கிக் கொண்டு வருகிறது. சர்வ தேச சங்[illegible]தில் ஐக்கிய அமெரிக்காவும், ருஷியாவும் அங்கத்தினர்களல்ல. மேலும் ஜப்பானின் அதிக்ரமமான நடவடிக்கைகளைத் தடுக்க இந்த 'ஸர்வ தேச சங்கம்' செய்த முயற்சிகளெல்லாம் முடவன் சண்டைக்காரர்களை விலக்க முற்பட்ட கதையாகவே ஆகி விட்டன. மேலும் ஸர்வ தேச சங்கத்தினிடம் ஜப்பானுக்கு துளியேனும் பயமோ பக்தியோ இருந்ததாகத் தெரிய வில்லை.

"ஸர்வ நாச சங்கமா?"

ஸர்வ தேச சங்கத்தில் பிரதான அங்கத்தினராக இருப்பது பிரிட்டிஷ் அரசாங்கம். சீனாவும் ஜப்பானும் அடித்துக் கொண்டு சாவதில் பிரிட்டிஷாருக்கு கவலை யிருப்பதாகத் தெரியவில்லை. இத்தனை நாளாக ஸர்வ தேச சங்கத்தைப் பிரமாதமாக எண்ணிக் கொண்டு அதை நம்பிக் கிடந்த சீனம், இப்போது தன் கையே தனக்குதவி என்ற கொள்கையை அநுசரிக்கத் தலைப்பட்டுளது. இப்பேர்ப்பட்ட வலிமையற்ற, சிரத்தை யற்ற ஒரு ஸர்வ தேச சங்கம் இருந்தென்ன போயென்ன? அது ஸர்வ தேச சங்கமா அல்லது ஸர்வ நாச சங்கமா?

ஸர்வ தேச சங்கம் குறைந்த பக்ஷமாக ஒரு காரியமாவது செய்யலாம். (covenant) ஒப்பந்தங்களின் 16-வது பிரிவுப்படி ஏதாவதொரு நாடு அனாவசியமான யுத்தத்தி லிறங்குமாயின் அதற்கு புத்தி கற்பிப்பதற்காக எல்லா நாடுகளுமாக சேர்ந்து அந்த நாட்டின் வியாபாரத்தில் மண்ணை அள்ளிப் போடலாம். அந்த ஆயுதத்தை உபயோகப் படுத்தியாவது ஜப்பானை வழிக்குக் கொண்டு வர வேண்டுமென உலகில் பல பத்திரிகைகள் அபிப்பிராயப் படுகின்றன.

ஆனால் ஸர்வ தேச சங்கம் என்ற பொம்மைக் கொலு இந்த ஆயுதத்தைத் திறமையாகக் கையாளுமா வென்பது சந்தேகம். இப்பேர்ப்பட்ட நொண்டிச் சபையில் இந்தியாவும் ஒரு அங்கத்தினராக இருப்பதை நாம் ஆதரிக்க மாட்டோம். இந்த உதவாக்கரைக் கூட்டத்துக்கு இந்தியா இனி காலணா கூடத் தரலாகாதென்பது நமது அபிப்பிராயம். நிற்க,

இந்த சின-ஜப்பானிய போரின் முடிவு, அதில் அமெரிக்காவும் ருஷியாவும் பங்கெடுத்துக் கொள்ளுமா வென்பதையே பொறுத்திருக்கிறது. ஆனால் சீனாவும் ஜப்பானும் ஒன்றோடொன்று சண்டை போடுகிற தருணம் பார்த்து, "இந்தா பீரங்கி! இந்தா குண்டு! இந்தா ஆகாய விமானம்" என்று அவ்விரு நாடுகளுக்கும் பேதா பேத மின்றி போர்க் கருவிகளை விற்பனை செய்ய மேனாட்டு வர்த்தகர் சிலர் தயாரா யிருக்கின்றனர். எல்லாம் ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக் கெளிது என்ற கதையாக வன்றோ இருக்கிறது!

இந்த யுத்தம் என்றைக்கு முடிவடையுமோ என்ற கவலையிலேயே உலகம் ஆழ்ந்திருக்கிறது.

அயல் நெய்யும், மனைவி கையும்

பத்து நாளைக்கு முன்னே சீமையில் கிழக்கிந்தியச் சங்கத்தின் ஆதரவின் கீழ் ஓர் பொதுக் கூட்டம் நடந்தது. அங்கு பேசப்பட்ட விஷயம் 'புதிய டெல்லி' என்பதாகும். அநேக தச்சர்களும், கொல்லத்துக்காரர்களும் அக் கூட்டத்திற்கு வந்திருந்தார்களாம். இர்வின் பிரபு அங்கு தலைமை வகித்தார். அங்கு ஒவ்வொரு பிரசங்கியும் எதையேனும் உளறிவிட்டு, "இந்தியாவில் பிரிட்டிஷ் அரசு செய்த மகத்தான காரியங்களில் புதிய டெல்லியைக் கட்டியதும் ஒன்று" என்று பல்லவி பாடினர். "அயலார் வீட்டு நெய்யே! என் பெண்டாட்டி கையே" என்ற கதையாகவே இருக்கிறது இந்தப் பிரிட்டிஷ் வம்பர்களின் பேச்சும். புதிய டெல்லியைக் கட்டுவதற்கு பிரிட்டிஷார் சீமையிலிருந்து பணம் கொண்டு வந்தார்களா? இந்திய விவசாயியின் வரிப் பணத்திலின்று தானே அது கட்டப்பட்டது? இந்தியாவின் ஏழ்மைத் தனத்தை அடியோடு மறந்து ஊதாரித் தனமாக கல்லிலும், மண்ணிலும், சிமிட்டியிலும் இந்திய காசைக் கொட்டிய பிரிட்டிஷார் 'புதிய டெல்லி' விஷயமாக பெருமை பாராட்டிக் கொள்வதா என்று கேட்கிறோம்.

புதிய டெல்லி கட்டுவதற்கு எப்படி வரிப் பணம் தண்ணீர் போலச் செலவிடப்பட்டது என்பது பற்றி 'சுதந்திரச் சங்கு' ஆராய்ச்சி செய்யாமற் போகவில்லை. போன வருடத்தில் இது சம்பந்தமான புள்ளி விவரங்களையும் வெளி யிட்டோம். ஒரு காலத்தில் லார்ட் ஹார்டிஞ்ச் 'டைம்ஸ்' பத்திரிகையில் எழுதிய கணக்கின் சாராம்சத்தை அடியில் தருகின்றோம். புதிய டெல்லி முழுவதையும் கட்டி முடிக்க மொத்தம் ஆன செலவு 14 கோடியே 47 லக்ஷம் என்று மதிப்பிடப் பட்டுளது. இவ்வளவு பணத்தைக் கொட்டி ஒரு தலைநகரம் கட்ட வேண்டுமா? பழைய கல்கத்தாவிலேயே தலை நகர மிருந்திருந்தால் என்ன? ஏன் அதை டெல்லிக்கு மாற்றி யிருக்க வேண்டும்? பாண்டவர்கள் ஆண்டதாகச் சொல்லப்படும் அத்தினபுரியும், மொகலாயர் ஆண்ட டெல்லியும் பிரிட்டிஷாரின் இந்த மகத்தான ஆக்ஷிக்குப் போதாதா? புதிய டெல்லி யொன்றைக் கட்டிக் கொள்ள வேண்டுமோ? நிற்க,

"வந்த தெல்லாம் கொள்ளும் மகராஜன் கப்பல்" என்ற கதையாக எவ்வளவு காசை இந்தப் புதிய டெல்லியின் கட்டிடங்கள் விழுங்கி யிருக்கின்றன என்பதற்கும் புள்ளி விரங்கள் உண்டு.

	கோடி	லக்ஷம் ரூ.
வைஸ்ராய் வீடு கட்ட	1	77
காரியாலயம் கட்ட	1	83
வைஸ்ராய் விட்டுக்கெதிரே நீர்த்துளிக் கருவிகளமைக்க		56
வைஸ்ராய் வீட்டுக்கும் காரியாலயத்துக்கும் நாற்காலி மேஜைகள் வாங்க		12
ரிகார்டு ஆபீஸ் கட்ட		9
சேனாதிபதி வீடு		9
கெஜட் ஆபீஸர்கள் வாழ்வதற்கு		51
குமஸ்தாக்கள் குடியிருக்க		66
சட்ட சபை அங்கத்தினர்கள் வசதிக்கு		10
இரண்டு சட்ட சபைகளும் கட்ட		88
யுத்த ஞாபகச் சின்னத்திற்கு		6
ரோடுகள் போட		30
எலக்டிரிக் விளக்கு		56

கட்டி முடிக்கும் காலம் வரையில் இந்த அருமையான கட்டிடங்களைக் காப்பாற்றுவதற்காக செலவான பணம் 98 லக்ஷம் ஆயிற்றென்று லார்ட் ஹார்டிஞ்சு 'டைம்ஸ்' பத்திரிகையில் ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்தப் புள்ளி விவரங்களை யெல்லாம் பார்க்கும்போது இந்தியனின் மனம் துடி துடிக்கின்றது. ஆனால் சீமையில் சில பிரிட்டிஷார் இந்த மகத்தான காரியத்தைப் பற்றி பீற்றலடித்துக் கொள்கிறார்கள். அன்று வட்ட மேஜை மகா நாட்டில் மகாத்மாஜி புதிய டெல்லியைப் பற்றிக் கூறிய மொழிகளை இங்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

"புதிய டெல்லி ஒரு பெரிய வெள்ளை யானையைப் போன்றது. ஸ்வராஜ்யம் வந்தால் இந்நகரை எவ்வாறு உபயோகிப்போம் தெரியுமா? பழைய டெல்லியில் காலரா பிளேக் ஏற்படுமாயின் அந்த வியாதியஸ்தர்களைப் படுக்க வைக்கவே இந்தப் புதிய டெல்லி உபயோகிக்கப்படும். அங்குள்ள கட்டிடங்கள் யாவும் இன்று தேச நன்மைக்கு விரோதமாக இருந்து வருகின்றன. இந்தியாவின் கோடிக் கணக்கான மக்களின் ஏழ்மைத் தனத்திற்கு மாறாக இந்தக் கட்டிடங்கள் இன்று இருக்கின்றன."

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி செய்த தவறுகளில் புதிய டெல்லியைக் கட்டியதும் ஒன்று. அயலார் வீட்டு நெய்யே யென்று இந்திய வரிப் பணத்தை வியர்த்தமாக்கி விட்டு பெருமை வேறு பேசிக் கொள்ள வாயிருக்கிறதா வென்று பிரிட்டிஷாரைக் கேட்கின்றோம்.

போருக்கு விரட்டியது யார்?

1932-ம் வருஷம் ஜனவரி மாத ஆரம்பத்தில் இந்தியாவில் நடந்த சரித்திர சம்பவங்களை இந்திய மக்கள் மறந்து விடவில்லை. ஆயினும் சமீபத்தில் ஓர் அறிக்கை மூலமாக “சட்ட மறுப்பு இயக்கம் மறுபடியும் தோன்றியதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல” என்று சர்க்கார் தட்டிக் கழித்துப் பேசியிருக்கிறார்கள். இதை நிரூபிக்க வில்லிங்டன்—காந்தி கடிதப் போக்கு வரத்தை வெளியிட விரும்பியவர்கள், அதில் ஒரு முற்றுப் புள்ளி, (.) வாட் குறி (,) கூட எடுக்காமல் அல்லவா பிரகரிக்க வேண்டும்? அவ்வாறு செய்யாமல் தங்களுக்குச் சாதகமான பாகங்களை மட்டும் வெளியிட்டு விட்டு, மற்றவற்றை ‘கப்’ என்று அமுக்கி விட்டார்கள்.

சர்க்காரின் இந்த அறிக்கையைப் பிளந்து நமது தலைவர் ராஜாஜி இப்பொழுது ஒரு மறுப்பு வெளியிட்டு, உண்மைகளை எடுத்துச் சொல்லியுள்ளார். இந்திய மக்கள் சரித்திரத்தை மறக்கவில்லை என்பதை அவரது அறிக்கை காட்டுகின்றது.

“கப்பலை விட்டிறங்கியதும், பல மாகாணங்களில் அடக்கு முறை தலை விரித்தாடி நின்றதைக் கண்ட மகாத்மா சமரச பாவனையிலேயே பேசத் தமக்குப் பேட்டி யளிக்குமாறு வில்லிங்டனுக்கு எழுதினார். அவசரச் சட்டங்கள், அடக்கு முறைகள் இவற்றைப் பற்றிப் பேசாமலிருக்கச் சம்மதித்தால் பேட்டி கிடைக்குமென வில்லிங்டனின் பதில் தந்தி வீறு பேசியது. இந்தத் தந்தியை சர்க்கார் தங்கள் அறிக்கையில் வெளியிடவே இல்லை.

“ஆனால் மகாத்மாஜி மீண்டும் சமரசத்திற்கே முயன்றார். “எனக்குப் பேட்டி யளித்து உங்கள் கக்ஷியைத் தெரிவியுங்கள். நான் அந்தந்த மாகாணங்களுக்கு நேரில் சென்று, விஷயங்களைக் கண்டறிந்து, பிறகு காங்கிரஸ் வாதிகள் தவறு செய்ததாக ஏற்பட்டால் அதை ஒப்புக் கொள்ளத் தயார்” என்று மன்றாடி மறுபடியும் அவர் வில்லிங்டனுக்குத் தந்தி கொடுத்தார். இதற்கும் “முடியாது” என்ற பதிலே கிடைத்தது. இவ்விஷயங்களெல்லாம் சர்க்கார் அறிக்கையில் காணப்படவேயில்லை. நியாயமான பாகங்களை மறைத்து விடுவது அநீதியல்லவா?

உண்மையில் நாட்டைப் போருக்கு விரட்டியது யார் என்பதைப் பொது மக்களும், உலகமும் இப்பொழுது நன்கு கண்டு கொள்ளலாம்.

“ஏற ஒன்று; இறங்க ஒன்று”

தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்கியவன் கதையைக் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டோம். “ஏறியதற்கு ஒரு காய்; இறங்கியதற்கு ஒரு காய். நீயாகக் கொடுத்தது ஒன்று; நானாக எடுத்துக் கொண்டது இன்னொன்று. மற்றொன்றைக் கொடுத்தால் கொடு; இல்லாவிட்டால் வேண்டாம்” என்று ஒருவன் கூலி சம்பாதித்தானாம். ‘பூவுலகின் அழுகை’ (Cry of the world) என்ற ஸினிமாப் படத்தைத் தொலைத்த கதையும் அதே போல இருக்கின்றது.

உலகில் ஆங்காங்கு ஏற்பட்ட குழப்பங்களையெல்லாம் தொடுத்து ‘பூவுலகின் அழுகை’ என்ற படம் தயாரிக்கப்பட்டது. இத்தாலியின் பாஸிஸ்டு இயக்கம், ருஷியாவின் பொதுவுடமை இயக்கம், இந்தியாவின் சுதந்திரப் போர் முதலிய பல வகைப்பட்ட இயக்கங்களின் காக்ஷிகள் அதில் தொகுக்கப்பட்டிருந்தன. மகாத்மா காந்தி, முஸோலினி, ஹிட்லர், மாக்டனால்டு, ஷா, ஹெண்டர்ஸன், பால்ட்வின் முதலிய பல தேசத்துப் பிரமுகர்களைப் பற்றிய நடவடிக்கைகளே அந்த ஸினிமாப் படத்தில் தொகுக்கப் பட்டிருந்தன.

லண்டனில் இத்தகைய படம் ஒன்று தயாரிக்கப் பட்டதென்று தெரிந்தவுடனே இந்தியா ஆபீஸிலிருந்து ‘மொட்டைப் பெடிஷன்’ போயிற்றாம். “இந்தியாவில் காந்தி ஆட்களைப் போலீசார் துரத்தும் காட்சிகளைத் தியேட்டரில் காட்டலாகாது, அவைகளை எடுத்து விடவும்” என்று இந்திய அதிகாரிகள் கூறினார்களாம். ஆகவே ஷை படத்தில் காந்தியடிகளைப் பற்றிய பகுதிகளை எடுத்து விட்டார்கள்.

பிறகு பட்டினிப் பட்டாளத்தைக் காட்டும் பகுதிகள் இருக்கலாகாதென சீமை சர்க்கார் ஆக்ஷேபித்தார்களாம். பெர்னார்ட் ஷாவைப் பற்றிய படத்தைக் காட்டலாகாதென இன்னொரு ‘கோழிப் பெடிஷன்’ போயிற்று. இப்படி ஒவ்வொரு சாரமான விஷயமும் வெளியே தள்ளப்பட்டு சக்கையாகக் கொஞ்சமே இருந்தது. கடைசியாக அந்தச் சக்கையைக் காட்டுவானேனென்று படத்தையே காட்டாது நிறுத்தி விட்டார்கள். தேங்காய்க் கூலி கொடுத்த கதையாக ஸினிமாப் படத்தைத் தயாரித்தவன் நிலை ஆகி விட்டது. ‘உலகில் அழுகை’ என்ற படமும் அழுதுக் கொண்டே மறைந்தது.

சூழ்ச்சிக் கடிதங்கள்

இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் தருவதை பார்லிமெண்டு அங்கத்தினர்கள் எதிர்க்க வேண்டுமென்று சீமையில் சில சூழ்ச்சிக்காரர்கள் வேலை செய்து வருகின்றனர். ஆங்காங்கு கடிதங்களைத் தயாரித்துத் தனித் தனி அங்கத்தினர்களுக்கு அனுப்பி மனக் குழப்பம் மேற்படச் செய்கின்றனர். சில கடிதங்களிலிருந்து சில வரிகளை எடுத்துக் கீழே தந்திருக்கிறோம்:

1. "இந்தியாவுக்கு கவர்ன்மெண்டு இளகலாகாது. அனைவரும் சர்ச்சிலுக்கு உதவியாக இருக்க வேண்டும். க்ளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் போன்ற நம்மவர் போரிட்டுச் சம்பாதித்து வைத்த இந்தியாவை நாம் விட்டு விடுவதா?"

2. "மத்தியப் பொறுப்பாட்சி கொடுத்து விட்டால் அப்புறம் பாதுகாப்புகளாவது? மண்ணாங்கட்டியாவது? அயர்லாந்தின் அனுபவத்திலிருந்து அறியலாகாதா? 'பாதுகாப்புகள்' வெறும் பிற்றல் கடுதாசிகளாக வேண்டுமோ?"

3. "போன எலெக்ஷனில் நான் உமக்கு உழைத்தவன். இந்திய மாகாணங்களை இந்திய மந்திரிகளிடம் ஒப்படைத்து விடலாகாது. ஏனெனில் அவர்களில் சிறை சென்று திரும்பியவர்களும் இருப்பர். ராஜ பக்தி நிறைந்த நமது போலீஸ்காரர்களை அந்த இந்திய மந்திரிகள் நசுக்குமாறு விடலாகாது."

4. "என்னுடைய உறவினரில் பலர் இந்திய சர்க்காரினின்றும் பென்ஷன் வாங்கிப் பிழைக்கின்றனர். இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் தந்த பின்பு ஷை பென்ஷன் பணத்துக்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு ஜவாப்தாரியாக இருப்பதென்றால் மட்டுமே இந்தியாவுக்கு வேறு அரசியல் தரலாம்."

வாரென் ஹேஸ்டிங்ஸ் முதலிய பேர் வழிகளின் யோக்யதையை அறிந்திருந்தும் 'திருட்டுச் சொத்து காருது' என்ற அபிப்பிராயத்தை உடையவன் மேலே சொன்ன முதல் கடிதக்காரன்; இரண்டாவது கடிதக்காரன் பெரிய பேராசைக்காரன்; மூன்றாவது கடிதக்காரன் இந்திய போலீசாருக்கும், இந்திய மந்திரிகளுக்கும் மித்திர பேதம் பண்ணி வைக்கப் பார்க்கிறான்; நான்காவது கடிதக்காரன் 'படா' சுயநலமியாக இருக்க வேண்டும். அவனுக்கு 36 கோடி இந்திய மக்களைப் பற்றிக் கவலையில்லை போலும். இப்பேர்ப்பட்ட சுயநலமுடைய கும்பலின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா சுதந்திரமடைய வேண்டாமா?

ஏன் ஜவாப் சொல்லவில்லை?

"நமக்கு லாபம் புரளவில்லை, நஷ்டமோ அளவிற்கு மிஞ்சி ஏற்பட்டிருக்கிறது" என்று ரயில்வே போர்டு தனது அறிக்கையில் ஓயாது அழுசிறதே யொழிய, பற்பல ரயில்வே விபத்துக்கள் காரணமாக இந்திய உயிர்களில் 2888 எமனுலகை யடைந்து விட்டதைப் பற்றி அது அனுதாபம் காட்டவுமில்லை, ஜவாப் சொல்லவும் காணோம். மேலே சொன்ன தொகையில் 1863 பேர்கள் ஹத்து மீறி நடந்தவர்களாம். இப் புள்ளி விவரங்களை வெளியிடுவதுடன் ரயில்வே போர்டின் பொறுப்பு கழிந்து விட்டதா? இனிமேல் இத்தகைய உயிர்ச் சேதங்கள் ஏற்படாமலிருக்க போர்டு என்ன நடை முறைகள் எடுத்துக் கொண்டிருக்கிற தென்பதை அது சொல்ல வேண்டாமா? எஞ்சினிலுள்ள சில இயந்திரங்கள் தக்க சமயங்களில் சரியானபடி வேலை செய்யாமல் போய் விட்டதால் 3575 விபத்துகள் ஏற்பட்டதாகவும் அறிக்கை கூறுகிறது. சரியான முன் ஜாக்கிரதை காட்டியிருந்தால் இவற்றைத் தடுத்திருக்கலாம் அல்லவா?"

—ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

ஸாம்யூல் ஹோர் ஹோட்டல்

படிப்பதற்காக சீமைக்குப் போயுள்ள இந்திய மாணவர்களின் தொல்லை சொல்லி முடியாது. 'நேஷனல் யூனியன்' கூட்டத்தில் அழாத குறையாய் நமது சிறுவர்கள் தங்கள் குறைகளை விஸ்தரித்திருக்கின்றனர். வைத்தியப் படிப்பு படிக்கின்ற பையன்கள் அனுபவ ஞானத்துக்காக ஏதாவது ஓர் ஆஸ்பத்திரியில் சேர்ந்து வேலை கற்றுக் கொள்ளலா மென்றால் இந்தியப் பையனுக்கு தங்குவதற்கு ஹோட்டல்கள் கிடைப்பதில்லையாம். கறுப்பு நிறமுடைய இந்தியனுக்கு உணவு பரிமாற வெள்ளைக்கார ஹோட்டல்கள் இடந் தர மறுக்கின்றனவாம். பிள்ளைகள் டப்ளின் போன்ற வேறு நகரங்களுக்கு ஓட வேண்டியிருக்கின்றதாம். "ஜாதி வித்யாசம், மத வித்யாசம், நிற வித்யாசம் முதலியவை தலை தூக்க வொட்டாமல் ஏகாதிபத்தியத்தை நேர்மையாக ஆள்கின்றோம்" என்று பெருமை பேசிக் கொள்ளும் ஸாம்யூல் ஹோர் இதற்கென்ன செய்யப் போகின்றார்? இந்தியர்கள் தங்குவதற்காக ஸாம்யூல் ஹோர் ஹோட்டல் வைத்து நடத்தலாம் என்று தோன்றுகிறது.

தமிழனும் ஹிந்தியும்

பாரத நாட்டின் ராஜீய பாஷையாக மாறப் போகிற ஹிந்தி பாஷையைத் தென்னாட்டினர் கட்டாயமாகப் பயின்றே தீரவேண்டும். சென்ற வருடத்தில் ஹிந்தி பரீக்ஷைகளில் எழுதியவர்களின் தொகை 4350. இவ்வருடத்தில் பரீக்ஷைகளில் கலந்து கொண்டவர்கள் 4683 பேர். ஆகவே 'முன்னேற்றம்' என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் இந்த வேகம் போதுமா வென்று கேட்டால், போதாது என்று தான் சொல்வோம். தெலுங்கு தேசத்திலும் மலையாள தேசத்திலும் ஹிந்தி பாஷையிடம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அபிமானம் இன்னும் தமிழ் நாட்டில் ஏற்படாதது வருந்தத் தக்கதே. தெலுங்கர்கள், 1776 பேரும், மலையாளிகள் 1417 பேரும் பரீக்ஷைக்கு உட்கார்ந்தார்கள். ஆனால் வாய்ச் சவடால் மிகுந்த தமிழர்களோ 532 பேர் தான் பரீக்ஷையில் கலந்து கொண்டார்கள். இந்த எண் தமிழ் நாட்டுக்குக் கவுரவம் தருவதா வென்று தமிழர்களைக் கேட்கின்றோம்.

ஏசுநாதரை ஹோர் அறிவாரா ?

டாக்டர் உருக்கு ஹார்ட் என்ற பேராசிரியர் கல்கத்தா சர்வ கலாசாலையில் உத்தியோகம் பார்த்தவர். அவர் சீமையில் ஒரு கூட்டத்தில் சொல்லி யிருப்பதாவது :— "இந்தியாவுக்கு வேண்டிய நன்மைகளை யெல்லாம் இந்தியர் அறிய மாட்டார்கள்; நாம் தான் நன்கறிவோமென்று நினைத்து தர்ம கர்த்தாக்களாக இருக்க நாம் விரும்புவது தவறு. இந்தியாவை பண வேட்டைக்கான நாடாக எண்ணுகின்ற நம்மவர் புத்தியைக் குறைக்க வேண்டும். விஷயம் தெரியாதவர்களைச் சுரண்டும் மனோபாவத்தைப் போக்க வேண்டும். சுதந்திரத்தில் ஆசை மிகுந்துள்ள இந்திய மக்களைக் கேவலம் குழந்தைகளென்று நாம் எண்ணுவதா? அவர்களது மனப் பூர்வமான தியாகங்களை நாம் ஆலோசிக்க வேண்டாமா? என்ன கடுமையாக ஆட்சி புரிந்தாலும் பலனளிக்கப் போவதில்லை. என்ன அழகான அரசியலைத் தந்தாலும் பலன் கிட்டாது. ஆனால் ஏசுநாதரின் அருளை மனத்திலுன்னி வேலை செய்தால் தான் இந்தியாவில் சமாதானத்தை ஸ்தாபிக்க முடியும்."

இவ்வாறு வெகு உருக்கமாக உருக்கு ஹார்ட் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். 'ஏசு கிறிஸ்து' என்றால் அவர் யாரென்று ஸாமுவேல் ஹோர் அறிவாரா வென்று நமக்கொரு சந்தேகம் !

1 சோடிக்கு 100 பத்திரிகை !

கல்வித் துறையில் உலகிலுள்ள இதர தேசங்கள் ஏரோப்ளேன் வேகத்தில் முன்னேற்றமடைந்து வருகையில், இந்திய நாடோ கடையாணி முறிந்த கட்டை வண்டியின் நிலையிலேயே இன்னுமிருந்து வருகின்றது என்பதை நாம் பன்முறை எடுத்துக் காட்டியுள்ளோம். அன்னியராட்சிக் குட்பட்டு, ஆங்கிலக் கல்வியின் மோக வலையில் சிக்கி மக்கள் மோசம் போய் வரும் நிலையில் நாட்டின் கலையுணர்வு மிகுந்து நிற்க இடமேது ? விசாகப்பட்டணத்தில் கூடிய மாணவர் மகா நாட்டில் தலைமை வகித்துப்பேசிய "மாடர்ன் ரெவியூ" பத்திரிகையின் ஆசிரியரான ராமானந்த பாபு இவ்வுண்மையையே விளக்கினார்.

அவர் சொன்னதாவது : "கலை வளர்ச்சிக்கும், அது சம்பந்தமான புத்தகங்கள் பெருகுவதற்கும் ஸ்வதந்திரம் அவசியம். ஆயினும் ராஜீய விடுதலை யில்லாத நிலைமையிலும் ஏராளமான புத்தகங்களை வெளியிடலாம். உதாரணமாக மகாத்மாஜியைப் பாருங்கள். உலகம் உய்வதற்கும், மக்கள் நல்வாழ்வு பெறுவதற்கும் அவர் எவ்வளவு எழுதித் தள்ளுகிறார் ? கல்வியின்றி அறிவு பிறக்காது ; அறிவு முதிர்ச்சியில்லாது நாட்டில் புத்தகங்கள் பெருக இடமில்லை.

"பாமர மக்களுக்கு நாம் கல்வி புகட்டி, சமூக அந்தஸ்து அளிப்போமானால் அப்பொழுது அவர்களது சுக துக்கங்களை அவர்களே வெளியிடும் புத்தகங்களிலிருந்து அறியலாம். ஷேக்ஸ்பியரும், கீட்ஸும், கோல்ட்ஸ்மித்தும் கையில் புத்தகத்தை வைத்துக் கொண்டே பிறந்தார்களா ? இல்லை ; ஆரம்பத்தில் நிரக்ஷர குக்ஷிகளாக விருந்தே அவர்கள் பேரறிஞர்களாயினர். இந்தியாவில் இத்தகைய அறிவாளிகள் தோன்றக் கூடாதா ?

"என்ன தேசம் ! என்ன அடிமைத்தனம் ! என்ன அவசரச் சட்டங்கள் ! மனத்திலிருப்பதை வாயால் வெளியிடவோ, அன்றி எழுத்து மூலமாகப் பகிரங்கப் படுத்தவோ நமக்கு உரிமை யில்லை. கானடாவைப் பாருங்கள் ! 1 கோடி மக்களுக்கு 1609 பத்திரிகைகளும், வெளியீடுகளு மிருக்கின்றன ; ஆனால் 4 கோடியே 7 லக்ஷம் ஜனங்களால் நிறைந்த சென்னை மாகாணத்தில் சுமார் 400 தானிருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் இந்தியா பின்னடைந்திருப்பதற்கு இந்த அறிவு வீழ்ச்சியே காரணமாக விருக்கிறது."

நமது கிளிஞ்சல் குவியல்

அடுத்த காங்கிரஸ் மார்ச்சு மீ 31 உ-ஏப்ரல் மீ 1 உ-களில் கல்கத்தாவில் கூடும் எனக் காங்கிரஸ் தலைவர் ஆனே அறிவிக்கின்றார்.

மதுரையில் 'ஸைக்ளோஸ்டைல்' மெஷின் வைத்துத் துண்டுப் பிரசுரம் தயாரித்ததற்காக ஒரு தொண்டர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ரயிலை நிறுத்தித் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக கோவிந்தராஜன் என்பவருக்கு மூன்று மாதம் கடுங்காவல்.

பரிக்ஷையில் பதிலளிக்கையில் ராஜத்துவேஷமான ஒரு பாட்டை விடையாக எழுதியதற்காக பட்டாம்பி சம்ஸ்கிருத கல்லூரி மாணவர் ஒருவர் ஒரு வாரத்துக்குக் கல்லூரியினின்று விலக்கப்பட்டிருக்கிறார்.

சிவகாசி போலீஸ் ஸ்டேஷன் சுவர்களிலும், மின்சார ஸ்தம்பங்களிலும் துண்டுப் பிரசுரங்களை ஒட்டியதற்காக மூவருக்கு தலா 6 மாதம். 20உ யன்று ஒருவர் கைதியானார்.

பெங்களூரில் ஒரு பிரபல வக்கில் பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெறும் சட்ட மறுப்பு இயக்கத்துக்குச் சாதகமான காரியங்களைச் செய்து வருவதாகச் சந்தேகித்து அவருடைய வீட்டை போலீசார் சோதனையிட்டு சில தஸ்தவேஜிகளையும், கடிதங்களையும் கைப்பற்றினர். மல்லேச்வரத்தில் வசிக்கும் 'டெமொகிராட்' ஆசிரியரின் வீட்டையும் சோதித்து சில கடிதங்களை மட்டும் போலீசார் கைப்பற்றினர்.

பாராபங்கியில் ரயிலை நிறுத்துவதற்கு சங்கிலியை இழுத்ததற்காக 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

கயாவில் மறியல் செய்ததற்காக கைது செய்யப்பட்ட 4 ஸ்திரீகள் உள்பட 20 பேரில் 17 பேருக்கு 3 மாதம் முதல் 6 மாதம் வரைக்கும்.

ஜபல்பூரில் சுபாஷ் பாபுவை அவரது உறவினர்கள் கண்டு பேசினர். நடப்பதற்கும், பேசுவதற்கும் கூட சக்தி யில்லாமலிருந்தும் அவர் உற்சாகமாகவே காணப் பட்டாராம்.

காசி சிறையில் ஸ்திரீகள் நெற்றியில் குங்குமம் அணிவதைத் தடுத்ததனால் உண்ணாவிரதமிருந்த ஸ்ரீமதி ராதா ராணி சென், தலைவர்களின் தலையீட்டின் பேரில் விரதத்தை நிறுத்தி விட்டார். அது சம்பந்தமாக அதிகாரிகள் கவர்ன்மெண்டாருக்கு எழுதி யிருப்பதாகத் தெரிகிறது.

பம்பாயில் விதேசி மருந்துகள் விற்கும் கடைகளை மறியல் செய்ததற்காக 6 பேர் கைதியானார்கள்.

ஜப்பானுக்குச் சொந்தமான ஒரு பாலத்தை சினர்கள் அழித்து விட்டனர். ஜப்பானியர்கள் ஜெஹோலையும், காய்லுவையும் தாக்க ஆரம்பித்து விட்டனர்.

காப்பி கிளப், பக்ஷணக் கடைகளில் ஹரிஜனங்களையும் அனுமதிப்பவர்களுக்குத் தான் லைசென்ஸ் கொடுக்கப் படுமென்று சேலம் முனிசிபாலிட்டி தீர்மானித்திருக்கிறது.

ஆலயப் பிரவேச மசோதாவை சட்ட மாக்குவதை ஆக்ஷேபித்து எழுதி யிருந்ததைப் புனராலோசனை செய்யும் படிக்கும், சட்டத் தடையை சட்டத்தால் தான் நீக்க முடியு மென்றும் ஸ்ரீ ராஜாஜீ மாளவியாவுக்கு பதில் கூறியிருக்கிறார்.

கல்கத்தாவில் ஒன்றரை லக்ஷம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு கோவிலும், சஞ்சத்துக் கருகில் பாப்பூர் கிராமத்தில் ஒரு கோவிலும், ஜலந்தரில் தாகூர்த்துவார் கோவில் ஒன்றும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டன.

ஜெய்ப்பூர் டவுனில் ஒரு கிணறும், ஆக்ராவிலுள்ள வாஸிர்ப்புராவில் ஒரு கிணறும் ஹரிஜன உபயோகத்துக்கு விடப்பட்டது. திருச்சியில் மூன்று கிணறுகள் வெட்டிக் கொடுப்பதற்கு ஆகும் செலவை தாம் கொடுப்பதாக ஒரு வைதிக பிராம்மணர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

பீகார் முஸபர்பூரில் 'வஸந்த பஞ்சமி' யன்று நடந்த சதுர்புஜ நாதர் ஆலயத்தில் ஹரிஜனங்கள் உள்பட எல்லோரும் சேர்ந்து வஸந்தோத்ஸவம் நடத்தினார்கள்.

"ஹரி ஜனம்"

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras